தமிழ் வளர்ச்சி விழா
1981

விழாத் தலைவர் :

மாண்புமிகு கல்வியமைச்சர்

செ. அரங்கநாயகம், எம்.ஏ., பி.டி., பி.எல்.

பரிசுகள் வழங்குவோர் :

மாண்புமிகு நிதியமைச்சர்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் துணைத் தலைவர்

புலவர் புலமைப் பித்தன்

கலைவாணர் அரங்கம் **6—6—1981**

தமிழ்நாடு அரசு—தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ் வளர்ச்சி விழா

1981

(அ) சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசளிப்பு.

(ஆ) பதிப்பகங்கட்குப் பாரட்டிதழ் வழங்குதல்.

(இ) நூல்கள் வெளியிட நூலாசிரியர்கட்கு நிதியுதவி.

(ஈ) சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதியோர்க்குப் பரிசு வழங்குதல்.

(உ) அலுவலகங்கட்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

(ஊ) தமிழ்நூல் விவர அட்டவணை வெளியிடல்.

154-B 5—

தமிழில் சிறந்த நூல்களுக்கான பரிசுப் போட்டி—விதிமுறைகள்

பரிசுத் திட்டத்திற்குத் தகுதியுடைய நூல்களை அனுப்பி வைப்பதற்கு நாளினைக் குறிப்பிட்டுத் தமிழ், ஆங்கில நாளிதழ்களில் அறிக்கை வெளியிடப்படுகிறது.

நூலாசிரியராலோ, பதிப்பகத்தாராலோ உரிய காலத்திற்குள் அனுப்பப்படுகின்ற அச்சடிக்கப்பட்ட நூல்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

பரிசுக்குரிய 21 தலைப்புகள்.

1. கவிதை. 2. நாவல். 3. மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள். 4. தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகியவை பற்றிப் பிற மொழிகளில் வெளிவந்துள்ள நூல்கள். 5 மானிடவியல், சமூகவியல், நிலநூல், அரசியல், சட்டம். 6, பொருளாதாரம். 7. கணிதம். வானவியல். 8 பொறியியல். தொழில் நுட்பவியல். 9. மருத்துவம், உடலியல், உணவியல், நல்வாழ்வு. 10. தத்துவம், சமயம், அளவியல், அறவியல், 11. சிறுகதை. 12. நாடகம். 13. கவின்கலைகள். 14. கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, பயண நூல்கள். 15. தாவரவியல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல். 16. இயற்பியல், இராசயனம். 17. கல்வி, உளவியல். 18. வரலாறு, தொல்பொருளியல். 19. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம். 20. குழந்தை இலக்கியம். 21. சிறப்பு வெளியீடுகள்.

பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுக்கும் முறை.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற உறுப்பினர்களுள் மூவரை இப்பரிசுப் போட்டியை நடத்தும் நிலைக் குழு உறுப்பினர்களாக அரசு நியமிக்கின்றது. இந்நிலைக் குழு ஒவ்வொரு தலைப்பிலும் உள்ள நூல்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பிடத் தனித் தனியே மூன்று நடுவணர்களை நியமிக்கின்றது.

நடுவணர்கள், தங்களால் கூர்ந்தாய்வு செய்யப்படும் நூல்களுக்கு மதிப்பெண்கள் வழங்குகின்றனர். நடுவணர் மூவரும் அளிக்கும் மதிப்பெண்களைக் கூட்டி, அதிக மதிப்பெண் பெறும் நூலாசிரியர் முதற் பரிசுக்குரியவராகவும், அடுத்த மதிப்பெண் பெறும் நூலாசிரியர் இரண்டாவது பரிசுக்குரியவராகவும் அறிவிக்கப் பெறுகின்றனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் ஒரே அளவு மதிப்பெண் பெற்றிருந்தால் பரிசுத் தொகை அந்நூலாசிரியர்களுக்குச் சமமாகப் பகிர்ந்து வழங்கப்படுகின்றது.

ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களின் கூட்டு முயற்சியால் இயற்றப்பட்டுப் பரிசுக்குரியதென ஒரு நூல் தேர்ந்தெடுக்கப்படுமாயின் பரிசுத் தொகை கூட்டாக அமைந்த ஆசிரியர்களுக்குப் பகிர்ந்து வழங்கப் பெறுகின்றது.

ஆசிரியர்களின் சொந்த நூல்களின் மொழி பெயர்ப்பல்லாமல், வேறெந்த மொழி பெயர்ப்பு நூல்களும் இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

பரிசு பெற்றவர்களுக்குப் பரிசுகளைப் பெறுவதற்காகச் சென்னை வருவதற்கு மட்டும் முதல் வகுப்பு இரயில் கட்டணம் பயணப் படியாக அளிக்கப்படுகின்றது. வெளிநாட்டு ஆசிரியர் ஒருவரால் எழுதப்பெற்ற ஒரு நூல் இந்தியாவிலோ, வெளிநாட்டிலோ, வெளியிடப்பட்டிருந்து, பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்நூலாசிரியர்க்குத் தகுதிச் சான்றிதழ் மட்டும் அளிக்கப்படும் ; பரிசுத் தொகை அளிக்கப்படமாட்டாது.

தமிழில் சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி அளிப்பதற்குரிய விதிமுறைகள்.

1. நிலையான மதிப்பு அல்லது பெருமையுடைய சிறந்த தமிழ் நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், நூலாசிரியர்களுக்கு அரசு பொருள் உதவி அளிக்கிறது.

2. நிதியுதவிக்கான நூல்கள் இதுவரையில் போதுமான அளவிற்கோ அல்லது மனநிறைவு தரும் வகையிலோ எழுதப்பட்டிராத பொருள்கள் குறித்தவையாயிருத்தல் வேண்டும். இதற்கென அரசால் நியமிக்கப்படும் வல்லுநர் குழு, நிதியுதவிக்கான நூல்களைத் தேர்ந்தெடுத்து அரசுக்குப் பரிந்துரைக்கும்.

3. நிதியுதவிக்குரிய நூல் தலைப்புகள்:

(1) தொல்பொருள் ஆய்வு குறித்த நூல்கள்.

(2) கல்வெட்டுகள், செப்பேடுகள் குறித்த நூல்கள்.

(3) மொழி, இலக்கியம் குறித்த நூல்கள்.

(4) தமிழர்களின் பழக்க வழக்கங்கள் குறித்த நூல்கள் (திருவிழாக்கள் உட்பட).

(5) தமிழ்நாட்டுக் கவின் கலைகள் குறித்த நூல்கள் (ஆராய்ச்சி நூல்கள் உட்பட).

(6) நவீன அறிவியல் குறித்த நூல்கள் (பாட நூல்கள் நீங்கலாக).

(7) இதுவரை வெளியிடப்படாமலுள்ள இலக்கிய நூல்கள்.

(8) பயனுள்ள அரிய நூல்களை மீண்டும் வெளியிடுதல்.

(9) தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பெயர்களின் கலைக் களஞ்சியம்.

(10) பல்வகை அகரமுதலிகள்.

(11) சிறந்த படைப்பிலக்கியங்கள்.

(12) அறிவியல் நூல்கள்.

(13) கலை நுணுக்க நூல்கள்.

(14) அனைத்துப் பிற துறை நூல்கள்.

4. கதைகள், நாடகங்கள், முற்றிலும் சமயம் பற்றிய நூல்கள் நிதியுதவிக்குக் கருதப்படமாட்டா.

5. சிறந்த நூல்களை வெளியிடுவதற்காக நிதியுதவி கேட்டு வெளியீட்டாளர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

6. இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி வேண்டுகிற நூலாசிரியர்கள், தங்கள் நூல்களின் கையெழுத்துப் படியினையும் இவ் விதிகளில் இணைப்பில் தந்துள்ள படிவத்தில் விண்ணப்பத்தினையும், தமிழ் வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-600 001 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

7. ஏற்கப்பட்ட நூல்களின் கையெழுத்துப் படியினை அச்சிட்டு வெளியிடுவதற்கு நூலாசிரியர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் அளவின் விவரம் பின்வருமாறு:—

(1) நூல் வெளியீட்டிற்கு ஆகும் செலவிற்கு வழங்கப் பெறும் உதவித் தொகையின் அதிக அளவு 50 விழுக்காடாகும்.

(2) ஒவ்வொரு நூலுக்கும் வழங்கப்படும் அதிக அளவுத் தொகை ரூ. 5,000 ஆகும். எனினும் மிகச் சிறந்த நூல்களுக்கு மேற்சொன்ன தொகைக்கும், விழுக்காட்டிற்கும் மேலாக உதவித் தொகையை அரசு வழங்கலாம்.

(3) ஒரு நூலுக்கு ஆயிரம் படிகள் அச்சிட்டு வெளியிடப் பெறும் என்னும் முறையில் தொகை கணக்கிடப்படும். மிகச் சிறப்பான நூல்களைப் பொறுத்தவரையில், அரசு நூல்களின் எண்ணிக்கையை உயர்த்தலாம்.

(4) அச்சிடப்படுகின்ற நூல்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கு நூல்களை இந்த விதியின் கீழ் உதவித் தொகை பெறுபவர் அரசுக்குத் தரவேண்டும்.

(5) பதிப்புரிமை நூலாசிரியருக்கு உரியதாகும்.

(6) ஒரு நூலின் கையெழுத்துப் படிகள் ஏற்கப்பட்டு, அவை அச்சிடப்படுவதற்காக அச்சகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன வென்று அந்த அச்சகத்தார் வழங்கும் சான்றிதழைக் காட்டுவதன் பேரில் 50 விழுக்காடு உதவித் தொகை வழங்கப்படும். எஞ்சிய 50 விழுக்காடு உதவித் தொகை அச்சிட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கினை அரசுக்கு அனுப்பியதும் வழங்கப்பெறும்.

8. இத்திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து அனைத்திலும் அரசின் முடிவே இறுதியானதாகும். அம்முடிவினை நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோ அல்லது பிற வகையிலோ எதிர்ப்பது கூடாது.

தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுதும் அரசுப் பணியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

அரசு அலுவலகங்களில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் போன்ற அரசிதழ் பதிவு பெறா அரசுப் பணியாளர்களுக்குத் தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள் எழுத ஊக்கமளிக்கும் வகையில் ஆண்டுதோறும் முதல், இரண்டு, மூன்று என மூன்று (ரூ. 500, ரூ. 300, ரூ. 200). ரொக்கப் பரிசு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அம் மாவட்டத்தில் உள்ள எல்லா அலுவலகங்களிலுமாக மூவர் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்களால் பரிசுக்குரியவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சென்னை மாநகரில் துறைத் தலைமை அலுவலகங்களிலும், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களிலும் பரிசுக்குரியவர்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அலுவலகங்களிலிருந்து கிடைக்கப்பெறும் கோப்புகளில் உள்ள தமிழ் நடை, தரம், கோப்புகள் தொடக்கம் முதல் முடிவு வரை ஆட்சி மொழியில் செயற்பட்டுள்ள தன்மை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படு கின்றனர்.

தமிழைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் அலுவலகங்களுக்கு தகுதிச் சான்றிதழ் வழங்குதல்.

ஒவ்வோர் ஆண்டும் தமிழைச் சிறந்த முறையில் பயன் படுத்திவரும் துறைத் தலைமை அலுவலகம் ஒன்றிற்கும் மாவட்டங்களில் மாவட்ட நிலை அலுவலகம் ஒன்றிற்கும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

சிறந்த நூல்களுக்கான பரிசு

முதற் பரிசு பெறுவோர்.

தலைப்பு. (1)	நூலின் பெயர். (2)	நூலாசிரியர். (3)	பதிப்பகத்தார். (4)
கவிதை	பனித் துளிகள் ..	கவிஞர் முருகு சுந்தரம்.	அரிமா பதிப்பகம், சேலம்-3.
நாவல்	இன்று புதிதாய்ப் பிறந்தோம்.	வையவன். ..	குங்குமம் வெளியீடு, சென்னை-17.
மொழி, இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.	சைனரின் தமிழ் இலக்கண நன் கொடை.	டாக்டர் க. ப. அறவாணன்.	சைன இளைஞர் மன்றம், சென்னை-17.
தமிழ், தமிழ்ப் பண்பாடு பற்றிப் பிற மொழிகளில் வந்துள்ளவை.	Folklore of Tamil Nadu	எஸ். எம். எல். இலக்குமணன்.	நேஷனல் புக் டிரஸ்ட், புது தில்லி.
மருத்துவம், உடலியல், உணவியல், நல்வாழ்வு.	சரபேந்திர சித்த மருத்துவச் சுடர்.	டாக்டர் மு. சௌரிராசன்.	சரசுவதி மகால், தஞ்சை.
சிறு கதை ..	ஒரு பாரத புத்திரன்.	ஜெகசிற்பியன். ..	வானதி பதிப்பகம், சென்னை-17.
நாடகம் ..	எள்ளல் நாடகங்கள்.	டாக்டர் ஆறு. அழகப்பன்.	பாரி நிலையம், சென்னை-1.
கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, பயண நூல்கள்.	எனது போராட்டம்.	சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம்.	இன்ப நிலையம், சென்னை-4.
தாவரவியல், விலங்கியல், உயிரியல், புவியியல், காட்டியல்.	தாவர இயல் வரலாறு.	கே. ஆர். பாலசந்திர கணேசன்.	தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை-31.
வரலாறு, தொல் பொருளியல்.	கொங்குநாட்டு வரலாறு.	மயிலை சீனி. வேங்கடசாமி.	நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-2.
வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கால்நடை மருத்துவம்.	பயிர் நோய்கள்.	எஸ். பி. கோவிந்தசாமி; எம். என். அழகிய நாகலிங்கம்.	பாப்புலர் புக் டிப்போ, சென்னை-34.
குழந்தை இலக்கியம்	கல் எண்ணெயின் கதை.	என். கே. வேலன்	திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை-1.

இரண்டாம் பரிசு பெறுவோர்.

தலைப்பு. (1)	நூலின் பெயர். (2)	நூலாசிரியர். (3)	பதிப்பகத்தார். (4)
கவிதை	ஐரோப்பா ..	கவிஞர் அரு. சோமசுந்தரம்.	பொன்முடி பதிப்பகம், காரைக்குடி.
நாவல்	1. மணக்கும் மணம்	கே. செயலட்சுமி.	தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை-8.
	2. சுதந்திர பூமி	இந்திரா பார்த்தசாரதி.	தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-5.
மொழி இலக்கியம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள்.	தேசியம் வளர்த்த தமிழ்.	கா. திரவியம். ..	பழநியப்பா பிரதர்ஸ், சென்னை-14.
மருத்துவம், உடலியல், உணவியல், நல்வாழ்வு.	தேரையர் மகா கரிசல்.	டாக்டர் ஆர். தியாகராசன்.	அன்புச் செல்வி அச்சகம், சென்னை-17.
சிறு கதை ..	கோவியின் கதைகள்.	டாக்டர் கோவி மணிசேகரன்.	வி. மாணிக்கம் கம்பெனி, சென்னை-1.
நாடகம் ..	அக்னி சாட்சியாக	காவிரி நாடன். ..	பாப்பா பதிப்பகம், நுங்கம், பாக்கம், சென்னை-34.
கட்டுரை, வாழ்க்கை வரலாறு, சுய சரிதை, பயண நூல்.	பேரறிஞர் அண்ணாவின் பெரு வாழ்வு.	மறைமலையான்.	வானதி பதிப்பகம் சென்னை-17.
தாவரவியல், விலங்கியல், புவியியல், உயிரியல், காட்டியல்.	காட்டுவளம்.	அஞ்சனம் அழகியனார்.	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை-1.
வரலாறு, தொல் பொருளியல்.	யாவரும் கேளிர்.	டாக்டர் இரா. நாகசாமி.	வாசகர் வட்டம், சென்னை-17.
குழந்தை இலக்கியம்.	மூவேந்தர் கதை,	பூவண்ணன். ..	சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை-1.

கவிஞர் முருகு சுந்தரம், எம்.ஏ.,
தலைமை ஆசிரியர்,
நகரவை மேனிலைப் பள்ளி,
ஈரோடு-638 003.

இவர் சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டில் 20-12-1930-ல் பிறந்தவர். பாவேந்தர் பாரதிதாசனோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். தமிழகமெங்கும் சுற்றிப் பாவேந்தரின் வாழ்க்கைக் குறிப்புகளைத் திரட்டி அவற்றை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். இவர் இப்போது ஈரோடு நகரவை மேனிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றி வருகிறார். 'கடைத் திறப்பு', 'சந்தனப் பேழை' போன்ற கவிதை நூல்களையும், 'தமிழகத்தில் குறிஞ்சி வளம்' எனும் அரிய கட்டுரை நூலையும் எழுதியுள்ளார்.

இவருடைய புனித் துளிகள் என்னும் கவிதைத் தொகுப்பு பரிசு பெறுகிறது.

154-B 5—2

திரு. வையவன்,
பள்ளிகொண்டா,
வட ஆர்க்காடு மாவட்டம்.

வட ஆர்க்காடு மாவட்டம் வாணியம்பாடியை அடுத்துள்ள வெள்ளக்குட்டை என்னும் ஊரில் 24—12—1939 ஆம் நாளில் பிறந்தவர். இவருடைய இயற் பெயர் எம். எஸ். பி. முருகேசன் என்பதாம். தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றுள்ள இவர் மலையாளம், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளையும் நன்கு அறிந்தவர். இவர் 3 புதினங்களும், 7 குறுநாவல்களும், 400-க்கு மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியுள்ளார். இவர் படைப்புகள் இந்தி, கன்னடம், உருது, வங்காளம் ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவர் இப்போது பள்ளிகொண்டா அரசினர் மேனிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

இன்று புதியதாய்ப் பிறந்தோம் என்னும் இவருடைய நாவல் பரிசு பெறுகிறது. '' இந்த யுகத்தின் நம்பிக்கை வெளிச்சம் பாரதத்தில் தோன்றுமா? அதன் பெருமைகள் எல்லாம் வெறும் பழம் பெருமைகள்தானா? '' என்பவை உலகத்தின் கேள்விகள். இக் கேள்விகளின் உந்துதலால் எழுந்ததே இந்த நாவலாகும்.

154-B 5—2

டாக்டர் க. ப. அறவாணன்,
ஆராய்ச்சியாளர்,
ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகம்,
தக்கார்,
செனகால்.

தஞ்சை மாவட்டம் கடலங்குடியில் 9—8—1941-ல் பிறந்தவர். இப்போது ஆப்பிரிக்க செனகல் நாட்டுத் தக்கார் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றி வருகிறார். 20-க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

பரிசு பெறுகின்ற சைனர்களின் தமிழிலக்கண நன்கொடை என்னும் இவருடைய நூலில் தமிழ்நாட்டுச் சைனர்களின் தொன்மை பற்றியும் இலக்கியம், இலக்கணம், கலை, சமயம் என மக்களோடு தொடர்புள்ள துறைகளில் சைனர்கள் ஆற்றியுள்ள தொண்டு பற்றியும் வரலாற்றுப் போக்கிலே தெளியக் கூறி, இலக்கணத் துறையில் அவர்கள் ஆற்றிய அரும் பணிகளைத் தனிச் சிறப்பாக எடுத்துக் கொண்டு ஆராய்ந்துள்ளார்.

திரு சோமலெ,
அஞ்சலகக் கட்டடம்,
சென்னை-600 020.

திரு. சோமலெ இராமநாதபுரம் மாவட்டம் நெற்குப்பை என்னும் ஊரில் 11-2-1921-ல் பிறந்தவர். சோம. இலக்குமணன் எனும் இயற்பெயர் கொண்ட இவர் ''சோமலெ'' எனும் பெயரில் பெரும் புகழ் எய்தியுள்ளார். இவர் உலகின் பல பகுதிகளை நேரில் கண்டறிந்தவர். பயணம், வேளாண்மை, நாட்டுப்புற இலக்கியம் போன்ற துறைகளில் பல அரிய நூல்களை எழுதியிருக்கிறார். **''தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்''** என்னும் இவருடைய நூல் ஆங்கிலத்திலும் பல இந்திய மொழிகளிலும் வெளியிடப் பெற்றுள்ளது. தமிழ் நாட்டு மாவட்டங்கள் ஒவ்வொன்று பற்றியும் தனித் தனியே இவர் எழுதியுள்ள நூல்கள் சிறந்த செய்திக் களஞ்சியங்களாகும்.

தமிழ்ப் பண்பாடு பற்றி இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள Folklore of Tamil Nadu என்னும் நூல் பரிசு பெறுகிறது.

டாக்டர். மு. செளரிராசன்,
மருத்துவ ஆராய்ச்சியாளர்,
அன்னை தமிழ் மருத்துவ மனை,
எண். 28, 8 ஆவது குறுக்குத் தெரு,
ஷெனாய் நகர் (மேற்கு),
சென்னை—30.

இவர் தஞ்சை மாவட்டம் திருப்புகலூரில் 23—2—1932இல் சித்த மருத்துவக் குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய முன்னோர் சரபோசி மன்னர் காலத்திற்கு முன்பிருந்தே தஞ்சை அரண்மனையில் சித்த மருத்துவர்களாகப் பணிபுரிந்து வந்துள்ளனர்.

இவர் 1957 முதல் 1976 வரை அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவ ஆராய்ச்சியாளராகப் பணியாற்றியுள்ளார். சித்த மருத்துவத் தொடர்பாக முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 1966-இல் திருக்குற்றாலத்தில் நடந்த கண்காட்சியில் 1500-க்கு மேற்பட்ட மூலிகைகளைக் காட்சிக்கு வைத்துத் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். 1968 இல் சித்த மருத்துவ மாநாட்டில் இவருடைய மருந்துகளின் சிறப்பைப் பாராட்டிக் கேடயம் வழங்கப்பட்டது.

இப்போது தனிப்பட்ட முறையில் மூலிகைகளைப் பயிரிட்டு, தீராத நோய்களெனக் கூறப்படும் புற்றுநோய், தொழு நோய், பக்கவாதம் போன்றவற்றிற்கு மருந்தளித்து வருகிறார்.

இவருடைய சரபேந்திர சித்த மருத்துவச் சுடர் என்னும் நூல் பரிசு பெறுகிறது. இந்நூல் எளிய நடையில் அனைவரும் சித்த மருத்துவத்தை அறிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

திரு. ஜெகசிற்பியன்,
172, பத்தாவது குறுக்கு
புலியூர் முதற்சாலை,
டிரஸ்ட்புரம்,
சென்னை-600 024.

தஞ்சை மாவட்டம் மாயூரத்தைச் சேர்ந்தவர். 19—6—1925 ஆம் நாளில் பிறந்தவர். இவருடைய படைப்பாக ஏறத்தாழ 30 புதினங்களும் 15 சிறுகதைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. இவருடைய ஜீவகீதம் என்னும் புதினம் 13 இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது, முப்பதுக்கும் மேற்பட்ட சிறு கதைகளும், குறுநாவல்களும் ஆங்கிலம், ஜெர்மன், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்று வெளிவந்துள்ளன.

பிரான்மலை பாரி விழாவில் 1974-ல் இவருக்கு '' நற்கதை நம்பி '' என்றும் விருது வழங்கப்பட்டது. 1979-ல் இவருக்கு தமிழ்நாடு அரசு அளித்துவரும் திரு. வி. க. விருது ரூ. 10,000 அளிக்கப்பட்டது. இவர் 1978 இல் மறைந்தார்.

'' என்னுள் சில சமயம் சில உணர்ச்சிகள் கிளர்ந்தெழும் போது, அவ்வுணர்ச்சிகளுக்கு ஒரு வடிவம் தரவேண்டுமென்ற வேட்கை வெடித்தெழும்போது நான் சிறுகதை எழுதுகிறேன் '' எனக் கூறும் திரு. ஜெகசிற்பியனின் சிறு கதைகள் அடங்கிய ஒரு பாரத புத்திரன் என்னும் நூல் பரிசு பெறுகிறது.

டாக்டர் ஆறு. அழகப்பன்,
தமிழ்த் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர்.

டாக்டர் ஆறு. அழகப்பன் இராமநாதபுரம் மாவட்டம் ஆத்தங்குடியில் 1937 ஆம் ஆண்டு பிறந்தவர். தமிழக நாட்டுப் புறப் பாடல்களை ஆய்வு செய்து எம். லிட். பட்டமும் தமிழக நாடகங்களின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆய்ந்து டாக்டர் பட்டமும் பெற்ற இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் துறையில் இப்போது இணைப் பேராசிரியராக இருந்து வருகிறார்.

இவர் 50-க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி வெளியிட்டுள்ளார், தமிழ் இலக்கியம், இலக்கணம் பற்றிய பல ஆராய்ச்சி நூல்களையும் எழுதியிருக்கிறார். நாடகங்கட்கெனத் தனித் திங்கள் இதழ் ஒன்றை நடத்திக் காட்டிய பெருமை இவருக்குண்டு. இவரது நாடக நூல்கள் சென்னை, அண்ணாமலை, பெங்களூர் முதலிய பல்கலைக் கழகங்களில் பாடமாக உள்ளன.

இவருடைய **எள்ளல் நாடகங்கள்** எனும் **நூல்** பரிசு பெறுகிறது.

டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்,
15, டாக்டர் சி. பி. இராமசாமி சாலை,
ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை-18.

இவர் 26-6-1906-ல் பிறந்தவர். பேச்சாலும், எழுத்தாலும் தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். 100-க்கும்மேற்பட்ட அரியநூல்களை எழுதியுள்ளார். சுதந்திரப்போராட்டத்தில் கலந்துகொண்டு எண்ணரிய தியாகங்களைப்புரிந்துள்ளார்' எல்லை மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுத் திருத்தணியைத் தமிழகத்தோடு சேர்த்த பெருமைக்குரியவர். 'சிலம்புச் செல்வர்' எனத் தமிழக மக்களால் அன்புடனும், பாசத்துடனும் அழைக்கப்படும் பெருமைக்குரியவர். சென்னைப் பல்கலைக் கழகம் இவருடைய இலக்கியச் சேவைக்காக டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. இவருடைய'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு 'என்னும் நூல் சாகித்ய அகாடமியின் பரிசு பெற்ற நூலாகும். தற்போது தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் தலைவராக இருந்து வருகிறார்.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும், சென்னை மாநகராட்சிக் கல்விக் குழுத் தலைவராகவும், சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைவராகவும் சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

பரிசுக்குரிய 'எனது போராட்டம்' எனும் நூல் இவரது வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிப்பதாகும்.

திரு. கே. ஆர். பாலச்சந்திர கணேசன், எம்.ஏ.,
தாவரவியல் பேராசிரியர்,
பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி,
திருச்சி.

இவர் கோவை மாவட்டம் அவிநாசிக்கருகிலுள்ள கைகாட்டிப் புதூரில் 6-9-1930 ஆம் நாளில் பிறந்தவர். மாணவப் பருவத்தில் கட்டுரை, நாடகம், பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசுகள் பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசு நியமித்த தமிழில் தாவரவியல் கலைச் சொல்லாக்கக் குழுவில் இடம் பெற்று, பல புதிய தமிழ்ச் சொற்களைப் படைத்து அரும் பணியாற்றி யுள்ளார். தாவரப் புற அமைப்பியல், தாவரவியல் வரலாறு, புதுமைப்பயிர்ப் பெருக்க முறைகள் போன்ற சிறந்த பயிரியல் நூல்களை எழுதியுள்ளார். இவர் இப்போது திருச்சி ஈ.வெ.ரா. பெரியார் கல்லூரியில் தாவரவியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

தமிழர் வாழ்வில் தாவரங்கள் எத்தகைய இடத்தைப் பெற் றுள்ளன; காலந்தோறும் தாவரங்களைப் பற்றிய அறிவு எவ்வாறு வளர்ந்துள்ளது என்பவைகளை விளக்கும் இவருடைய **தாவரவியல் வரலாறு** என்னும் நூல் பரிசு பெறுகிறது.

திரு. மயிலை சீனி. வேங்கடசாமி,
22, காரணீசுவரர் கோயில் தெரு,
மயிலை, சென்னை-600 004.

ஆராய்ச்சி அறிஞர் சீனி. வேங்கடசாமி அவர்கள் 16-12-1900-ல் மயிலையில் தோன்றியவர். தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய திரு. சீனி. வேங்கடசாமி தம் சொந்த முயற்சியால் முன்னேறி, தமிழகத்தில் உள்ள ஆராய்ச்சி அறிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராகத் திகழ்ந்தார். ' கிறித்துவமும் தமிழும் ', ' பௌத்தமும் தமிழும் ', ' சமணமும் தமிழும் , போன்ற அரிய ஆராய்ச்சி நூல்களையும், ' மகேந்திர வர்மன் ' நரசிம்ம வர்மன் ', மூன்றாம் நந்தி வர்மன் ' போன்ற வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். இவருடைய 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ' ' மகாபலிபுரத்து ஜைன சிற்பம் ' முதலிய நூல்கள் அறிவுக்கு விருந்தாக விளங்குபவை. இவர் 8— 5— 1980 அன்று மறைந்தார்.

கொங்கு நாட்டு வரலாறு என்னும் இவரது நூல் பரிசு பெறுகிறது. '' நமக்குக் கிடைத்த வரையில் உள்ள சான்றுகளையெல்லாம் தொகுத்து வரன்முறையாக எழுதப்பட்ட சங்க காலத்துக் கொங்கு நாட்டுச் சரித்திர நூல் இது '' என இந்நூல் பற்றி இவர் குறிப்பிடுகிறார்.

டாக்டர் சி. வி. கோவிந்தசாமி,
19, ஸ்ரீராம் லே அவுட்,
என். எஸ். ஆர். சாலை,
கோவை—11.

இவர் கோவை மாநகரைச் சார்ந்தவர். இவர் பிறந்த நாள் 7—2—1922. தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறையிலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் பல்துறைகளில் பணி யாற்றி இறுதியாக வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பட்ட மேற்படிப்பு முதல்வர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்.

வேளாண்மைத் துறையில், குறிப்பாகப் பயிர் நோய்களின் ஆராய்ச்சியில் மிக்க அனுபவமுடையவர். 1962 ஆம் ஆண்டு பயிர் நோயியலில் மிகச் சிறந்த ஆராய்ச்சியாளருக்கான தங்கப் பதக்கமும் சுழற் கேடயமும் இவருக்கு அளிக்கப்பட்டது. பயிர் நோயியலில் 100-க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை இந்திய, வெளிநாட்டு இதழ்களில் வெளியிட்டுள்ளார்.

பயிர் நோய்கள் எனும் இவரது நூல் பரிசு பெறுகிறது. வேளாண் மக்கள் பயிர் நோய்களைத் தெரிந்து அவற்றைத் தடுக்கும் வழிகளை அறிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவுகிறது.

டாக்டர் எம். என். அழகிய நாகலிங்கம்,
இணைப் பேராசிரியர்,
பயிர் நோயியல் துறை,
வேளாண்மைக் கல்லூரி,
மதுரை-625 104.

இராமநாதபுரம் திருவில்லிப்புத்தூரில் 10—5—1936-ல் பிறந்தவர். பயிர் நோயியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இப்போது மதுரை வேளாண்மைக் கல்லூரியில் பயிர் நோயியல் துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இத்துறை மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

இவர் திரு சி.வி. கோவிந்தசாமி அவர்களுடன் இணைந்து எழுதியுள்ள பயிர் நோய்கள் என்னும் நூல் பரிசு பெறுகிறது.

திரு. என். கே. வேலன்,
1, ஸ்ரீராம் காலனி,
பீமண்ணத் தோட்டத்தெரு,
ஆழ்வார்ப்பேட்டை,
சென்னை-600 018.

சேலத்திற்கடுத்த பாகற்பட்டி என்னும் ஊரில் 1907-ல் பிறந்தவர். இவர் தமிழ்நாடு அரசு காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் அறிவியல் அறிஞர். ‘ இயற்கையும் செயற்கையும் ’, ‘ மண்ணும் விண்ணும் ’ போன்ற அறிவியற் கட்டுரை நூல்களையும், ‘ மின்சாரத்தின் கதை ’, ‘ காற்றின் கதை ’, ‘ அணுவின் கதை ’ போன்ற அறிவியலுண்மை நூல் களையும் படைத்துள்ளார். குழந்தைகட்காக நூறு நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். கதை, கட்டுரை மட்டுமல்லாது பல மொழி பெயர்ப்பு நூல்களையும் ஆக்கித் தந்துள்ளார். இவர் 30—12—1979 அன்று மறைந்தார்.

மண்ணிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் எவ்வாறு உண்டா யிற்று ? இதனைக் கண்டுபிடித்தவர் யார் ? எண்ணெய்த் தொழில் எப்படியெப்படியெல்லாம் வளர்ச்சி அடைந்து வருகிறது என்பன போன்ற செய்திகளை விளக்கும் **கல் எண்ணெயின் கதை** என்னும் இவரது நூல் பரிசு பெறுகிறது.

கவிஞர் அரு. சோமசுந்தரம், எம்.ஏ., பி.டி.,
பொன்முடி பதிப்பகம்,
123, முத்துப்பட்டணம், மூன்றாவது தெரு,
காரைக்குடி.

இவர் இராமநாதபுரம் மாவட்டம் புதுவயலில் 14—8—1936 ஆம் நாளில் பிறந்தவர். 1957-ல் சென்னைப் பல்கலைக் கழக பி.ஏ., தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று '' ஜி.யு. போப் தங்கப் பதக்கத்தைப் '' பரிசாகப் பெற்றுள்ளார். '' தமிழ்நாடு '' எனும் செய்தித்தாளில் சில திங்கள் துணையாசிரியராகவும், ''பாங்க் ஆப் மதுரை ''யில் சில காலம் எழுத்தராகவும், உயர்நிலைப் பள்ளிகளில் சில ஆண்டுகள் தலைமையாசிரியராகவும் பணியாற்றிய இவர் இப்போது பதிப்பகம் ஒன்றை நிறுவி நடத்தி வருகிறார். '' பல் துறைச் செந்நாப் பாவலர் '', '' கவிஞர் கோ '' எனும் சிறப்புப் பட்டங்கள் பெற்றுள்ளார். மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலார் நடத்திய காவியப் போட்டியில் பங்குபெற்று 1973-ல் ''பொற்கிழி'' பெற்றார்.

ஐரோப்பா என்னும் தலைப்பிலமைந்துள்ள இவருடைய கவிதை நூல் பரிசு பெறுகிறது.

திருமதி கே. செயலட்சுமி,
(24) 5-முதல் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.

1953 முதல் எழுதி வருகின்ற இவர் இதுவரை 500-க்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். இவர் 10—5—1928 ஆம் நாளில் பிறந்தவர். வானொலியில் இவருடைய நாடகங்கள் நூற்றுக்கு மேல் ஒலிபரப்பாகியுள்ளன. இவர் இயற்பெயர் தவிர மகேசுவரி, சங்கரி, குணவதி என்னும் புனை பெயர்களிலும் எழுதி வருகிறார். கல்கி மாதச் சிறுகதை போட்டியில் 'தியாகியார்' என்னும் கதைக்கும் குழந்தை எழுத்தாளர் சங்கப் போட்டியில் 'அன்புச் சுரங்கம்' என்னும் புதினத்திற்கும் பரிசு பெற்றுள்ளார். தமிழ்நாடு அரசின் சிறுசேமிப்பு இயக்கப் போட்டியில் 'சிறுதுளி பெரு வெள்ளம்' என்னும் இவரது நாடகம் முதற்பரிசு பெற்றது.

இன்றைய இளைய தலைமுறையினருக்குச் சமுதாயச் சூழ்நிலை பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. இவற்றால் நிலை தடுமாறிய ஓர் இளைஞன் நேரிய மனிதனாவதை விளக்கும் **மணக்கும் மணம்** என்னும் இவருடைய நாவல் பரிசு பெறுகிறது.

திரு. இந்திரா பார்த்தசாரதி, எம்.ஏ., பிஎச்.டி.,
தில்லிப் பல்கலைக் கழகம், தில்லி.

திரு. இந்திரா பார்த்தசாரதி தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் பணியாற்றி வருகிறார். இவர் 10–7–1930 ஆம் நாளில் பிறந்தவர். கால வெள்ளம், குருதிப் புனல், திரைகளுக்கு அப்பால் போன்ற பல புதினங்களையும், ''உச்சி வெயில்'', ''ஊனம்'' ''சுமைகள்'' போன்ற குறுநாவல் களையும், ஏராளமான சிறு கதைகளையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, ''பசி'', ''ஔரங்கசீப்'' எனும் நாடகங்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்தவையாகும். இவருடைய ''குருதிப் புனல்'' என்னும் புதினம் சாகித்ய அகாடமியின் பரிசினைப் பெற்றுள்ளது. ''இராமானுஜர்'' பற்றி இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள வரலாற்று நூல் 12 இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. இந்திரா பார்த்தசாரதி எதனையும் கூர்ந்து நோக்கிக் குத்தலாக எடுத்துச் சொல்வதில் வல்லவர். பரிசு பெறுகின்ற சுதந்திர பூமி என்னும் புதினத்தில் இவ்வாறே நாட்டு நிகழ்ச்சிகளையும் அரசியல் சூழ்நிலைகளையும் சொல்லிச் செல்கிறார்.

திரு. கா. திரவியம், இ.ஆ.ப.,
5, நந்தனம் விரிவு,
சென்னை-35.

7—7—1925 இல் பிறந்த இவர் மாணவப் பருவத்திலேயே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற பெருமைக்குரியவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆற்றல் மிகுந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்து வருகிறார். டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களது நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், ஜெயகாந்தன் அவர்களது சிறுகதைகளைத் தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

அரசுப் பணியில் படிப்படியாக உயர்ந்து தற்போது தமிழ்நாடு அரசின் இரண்டாம் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.

பரிசுக்குரிய தேசியம் வளர்த்த தமிழ் என்னும் நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய 'கல்கி' அறக்கட்டளைச் சொற்பொழிவின் தொகுப்பாகும். "எண்ணற்ற தலைவர்களும் தொண்டர்களும் தாய்நாட்டுப் பற்றினால் ஆட்கொள்ளப்பட்டுத் தமிழ் மூலம் தேசியத்தை வளர்த்த பெரும் வரலாற்றினை இந்நூல் விளக்கமுறக் கூறுகிறது.

டாக்டர் ஆர். தியாகராசன், எல்.ஐ.எம்.,
58, அய்யாவு தெரு,
செனாய் நகர்,
சென்னை—600 030.

இவர் 12—4—1915ஆம் நாளில் பிறந்தார். இந்திய மருத்துவத் துறையைச் சேர்ந்த கல்லூரிகளில் விரிவுரையாளராகவும் உதவிப் பேராசிரியராகவும் பணியாற்றி வந்த இவர் இப்போது சென்னை அரும்பாக்கம் சித்த மத்திய ஆராய்ச்சி நிலையத்தில் மதிப்புறு ஆலோசகராக இருந்து வருகிறார். '' மருத்துவப் பொழில் '' என்னும் சித்த மருத்துவத் திங்கள் இதழின் துணையாசிரியராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். உடற்கூறுகள், தட்சிணாயனர் வைத்திய அட்டவணை போன்ற மருத்துவ நூல்களை எழுதியுள்ளார். தேரையரின் பல நூல்களை உரையுடன் பதிப்பித்துள்ளார். சித்த மருத்துவ முறையில் குடற்புண், புற்று நோய், மஞ்சட்காமாலை முதலிய நோய்கள் பற்றி ஆய்ந்து தக்க மருத்துவ முறைகளைக் கண்டறிந்துள்ளார்.

தமிழில் சித்த மருத்துவ இலக்கியங்களில் தேரையர் மகா கரிசல் உயர்ந்த மொழிச் சிறப்பும் பொருட் செறிவும் மிகுந்தது. பரிசு பெறும் இவரது நூல் தேரையர் மகா கரிசலின் சிறந்த உரையாக விளங்குகிறது.

டாக்டர் கோவி. மணிசேகரன்,
2, பிள்ளையார் கோயில்தெரு,
காந்திநகர்,
சாலி கிராமம்,
சென்னை-600 093.

டாக்டர் கோவி. மணிசேகரன் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். 2—5—1927-ல் பிறந்தவர். 1945 முதல் தொடர்ந்து இவர் எழுதி வருகிறார். ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறு கதைகளையும் 100-க்கு மேற்பட்ட புதினங்களையும் எழுதி யுள்ளார், இவர் தீட்டிய '' குடவாயிற் கோட்டம் '' தின மணிக் கதிரின் வரலாற்றுப் புதினப் போட்டியில் முதற் பரிசை யும், '' நப்பசலையின் காதல் '' கல்கி சிறுகதைப் போட்டியில் முதற் பரிசினையும், '' சேரன் குலக்கொடி '' என்னும் புதினம் தமிழ்நாடு அரசின் முதற் பரிசினையும் பெற்றுள்ளன. இவருடைய '' யாகசாலை '' எனும் புதினம் இராஜா சர். அண்ணாமலையாரின் அறக்கட்டளைப் பரிசினைப் பெற்றுள்ளது.

'' எனக்கென்று படித்த வட்டங்களிருக்கின்றன. அந்த வட்டம் என்றைக்கும் இருந்து கொண்டே இருக்கும் '' எனும் தன்னம்பிக்கையோடு எழுதும் திரு. கோவி. மணிசேகரனின் **கோவியின் கதைகள்** எனும் சிறுகதைத் தொகுப்பு பரிசு பெறுகிறது.

கவிஞர் காவிரிநாடன்,
38, கலைமகள் நகர்,
ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-600 097.

திருச்சி மாவட்டம் கரூருக்கு அண்மையிலுள்ள கிழக்குத் தவுட்டுப் பாளையம் என்னும் ஊரில் 6–6–1939-ல் பிறந்தவர். எட்டாம் வகுப்பில் பயிலும்போதே எழுதத் தொடங்கினார். பல மாணவ அமைப்புகளில் தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் இப்போது தமிழ்நாடு அரசின் கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார். புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கவிதைகள் என 20-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பல நாடகங்களை இவரே எழுதியும் இயக்கியும் நடித்தும் இருக்கிறார்.

இவருடைய அக்னி சாட்சியாக எனும் நாடக நூல் பரிசு பெறுகிறது.

திரு. அ. மறைமலையான்,
24, வாலாசா சாலை,
சென்னை—600 002.

இவர் தஞ்சை மாவட்டம் கண்ணந்தங்குடியில் 8—7—1933-ல் பிறந்தவர். பல்வேறு ஏடுகளில் கதை, கட்டுரைகள் மற்றும் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவருடைய ' நெஞ்சில் ஒரு நிலவு ', ' யாருக்காக வாழ்கிறாள் ' போன்ற புதினங்களும், ' இரவீந்திரநாத் தாகூர் ', ' அன்னை தெரசா ' போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்களும், ' அண்ணாவின் பொன் மொழிகள் ', ' திரு. வி. க. மணி மொழிகள் ' போன்ற தொகுப்பு நூல்களும் புகழ் பெற்றவை. 1954-ல் அகில இந்திய வானொலி நிலையம் நடத்திய தமிழ் நாடகப் போட்டியில் இவரது ' காட்டு மல்லிகை ' என்னும் நாடகம் முதற் பரிசு பெற்றது. ' கலைமகள் ' நடத்திய கிழமைக் கதைகள் சிறு கதைப் போட்டி யில் இவருடைய 'ஞாயிற்றுக் கிழமை' என்னும் கதை முதற் பரிசு பெற்றது.

உலகமே பின்பற்றத்தக்க பேரறிஞர் அண்ணாவின் பெரு வாழ்வில் நடந்த நிகழச்சிகளைத் தொகுத்து அழ்கிய வரலாறாகத் தந்துள்ள **பேரறிஞர் அண்ணாவின் பெரு வாழ்வு** என்னும் இவருடைய நூல் பரிசு பெறுகிறது.

திரு. உ. அஞ்சனம் அழகியனார், எம்.எஸ்.சி. (வே.),
துணைப் பேராசிரியர்,
தோட்டக் கலைக் கல்லூரி,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-641 003.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் தோட்டக் கலைத் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர் கன்னியாகுமரி மாவட்டம் அழகியபாண்டியபுரம் என்னும் ஊரில் 18—5—1940-ல் பிறந்தவர். கடந்த 18 ஆண்டுகளாகத் தோட்டக் கலைத் துறையில் பழங்கள், காய்கறிகளில் ஆய்வு செய்து வருகிறார். இவரது ஆய்வின் பயனாக பிகே எம்-1 என்னும் தக்காளியும், பிகே எம்-1 என்னும் புடலையும் வெளிவந்துள்ளன. மாமரமும் வளர்ப்பு முறைகளும், பழவளம், காட்டுவளம், மாதுளை போன்ற பல சிறந்த நூல்களை எழுதியுள்ளார். இவருடைய ஆங்கில ஆய்வுக் கட்டுரைகள் இந்தியாவிலுள்ள முதன்மையான தோட்டக் கலை இதழ்களில் வெளிவந்துள்ளன.

பரிசுபெறுகின்ற இவருடைய **காட்டு வளம்** என்னும் நூல் இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் அமைந்துள்ள காடுகளைப் பற்றியும் அவற்றின் வளர்ப்பு முறை பற்றியும் விளக்குகிறது.

டாக்டர் இரா. நாகசாமி,
தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர்,
சென்னை-28.

இவர் கோவை மாவட்டம், ஊஞ்சலூர் கிராமத்தில் 10-8-1930 ஆம் நாளில் பிறந்தவர். மாநிலத் தொல் பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநராக 1966 முதல் இருந்து வருகிறார். மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறையின் அகழாய்வு, பண்டைய சின்னங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ளார். மாநிலத் தொல்லியல் துறையின் கீழ் இயங்கிவரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றி வருகிறார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் பல அரிய நூல்களை எழுதியுள்ளார்.

பரிசுபெறுகின்ற யாவரும் கேளிர் என்னும் நூலுள் தமிழக மக்களின் நோக்கும், போக்கும் நுண்ணிதின் ஆராய்ந்து புலப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றால் பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகமும் பண்பாடும் தெள்ளிதின் விளங்குகின்றன.

திரு. பூவண்ணன்,
9, அரங்கராசுலு தெரு,
அய்யாவு குடியிருப்பு,
அமைந்தகரை,
சென்னை-600 029.

"பூவண்ணன்" என்னும் புனைப் பெயர் கொண்டுள்ள திரு. கோபாலகிருஷ்ணன் 4—9—1932-ல் பிறந்தவர். இவர் சென்னை வைணவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் புகழ் பெற்றுள்ள குழந்தை எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். சிறுவர்களுக்காக அறுபதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பள்ளி மாணவராக இருந்தபோதே எழுதத் தொடங்கிய இவர் கல்லூரி மாணவராக இருந்தபோது. 'கரும்பு' என்னும் சிறுவர் வார இதழின் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவருடைய "ஆலம் விழுது" என்னும் புதினம் தமிழ், கன்னடம், .இந்தி மொழிகளில் திரைப்படமாக்கப்பட்டுள்ளது. 1971-ல் சிறந்த திரைப்படக் கதாசிரியர் எனவும், 1979-ல் சிறந்த குழந்தைப் படக் கதாசிரியர் எனவும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசு பெற்றுள்ளார்.

பரிசு பெறுகின்ற **மூவேந்தர்** கதை என்னும் நூல் கரிகாற் சோழன், சேரன் செங்குட்டுவன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் ஆகிய மூவேந்தர் பற்றிச் சிறுவர்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் எழுதப்பட்டு உள்ளது.

தமிழில் சிறந்த வரைவுகள், குறிப்புகள்

எழுதிப் பரிசு பெறுவோர்

துறைத் தலைமை அலுவலகங்கள்:

1. திரு. வி. கணேசன், இளநிலை உதவியாளர், தீயணைப்புத் துறை, சென்னை-8.	முதற் பரிசு ரூ. 500.
2. திரு. ம. சத்தியநாதன், உதவியாளர், பொது நூலகத் துறை, சென்னை-8.	இரண்டாம் பரிசு ரூ. 300.
3. திரு. ஆர். ஆர். ஸ்ரீதரன், உதவியாளர், மீன்துறை, சென்னை-6.	மூன்றாம் பரிசு ரூ. 200

செங்கற்பட்டு மாவட்டம்.

1. திரு. இரா. குமார், இளநிலை உதவியாளர், மீன் துறை உதவி இயக்குநர் அலுலவகம், செங்கை (இ) சென்னை-6.	மூன்றாம் பரிசு ரூ. 200.

தகுதிச் சான்றிதழ் பெறும் அலுவலகங்கள்.

1976 .. .. இந்து சமய அறநிலையத் துறை.

1977 .. .. சீர்திருத்தப் பணித்துறை.

1978 .. .. பத்திர பதிவுத் துறை.

தமிழில் சிறந்த நூல்கள் வெளியிட நிதியுதவி பெறுவோர்

நூலாசிரியர் பெயர்.	நூலின் பெயர்.
(1)	(2)
1. டாக்டர் கு. திருமேனி, 14, வீரேச்சுரம், ஸ்ரீரங்கம், திருச்சி-6.	''கம்பராமாயணத் தோற்றம் ஓர் ஆய்வு.''
2. டாக்டர் நா. செயப் பிரகாசு, 20, ஐந்தா வது தெரு, வள்ளுவர் கோட்டம், சென்னை-34.	''மறைமலையடிகளா ரின் இலக்கியப் படைப்புகள்.
3. வித்வான் வே. சந்திர சேகரன், இலவனூர் அஞ்சல், திருமக் கோட்டை (வழி), தஞ்சை-614 017.	''காந்தீயம்''
4. டாக்டர் ப. கோபா லன், உயர் ஆய்வா ளர், உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், சென்னை-600 020.	''பரஞ்சோதி திரு விளையாடல் புராணம்''
5. சி. இராமகிருஷ்ணன், 85, சிவசுப்பிரமணி யம் ரோடு, ஆர்.எஸ். புரம், கோவை-2.	''வளரும் ஜனநாயகத் தில் நீதிமன்றங்கள்''

1981 சனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கண்காட்சியில் தமிழ் வளர்ச்சித் துறை அமைத்திருந்த அரங்குகள் பற்றிய அறிஞர்களின் பாராட்டுரைகளிற் சில :

தமிழ் வளர்ச்சித் துறையின் இக் கண்காட்சியில் அமைந்துள்ள நானிலக் காட்சிகள் உள்ளத்தைக் கவர்ந்தன.

இப்பெரு முயற்சி செய்துள்ள அன்பர்கள் அனைவரையும் பெரிதும் பாராட்டுகிறேன்.

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்,
திருச்சி-8.

தமிழ் வளர்ச்சித் துறை நம் கண்முன்னே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் காட்சிகளை அற்புதமாக உருவாக்கிக் காட்டியிருக்கிறது. ஐம்புலன்களுக்கும் விருந்து. இதன் வெற்றிக்கு உழைத்த அனைவருக்கும் என் பாராட்டுக்கள் ; வாழ்த்துக்கள்.

திரு. அகிலன்,
அகில இந்திய வானொலி நிலையம்,
சென்னை-4.

ஐந்திணைக் காட்சி விளக்கம் அழகாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு என் பாராட்டுக்கள்.

திரு. கு. இராஜவேலு,
எழுத்தாளர்.

செந்தமிழின் வளந்தெரிய ஐந்திணையின் திறம்அறியச்
செறிவோ டிங்கே
முந்துபல காட்சியினைக் கண்டுவந்தேன்; கருப்பொருளும்
மூவாதோங்கிச்
சந்தநிறை முதற்பொருளும் உரிப்பொருளும் நனிதோன்றச்
சமைத்து வைத்தார்;
இந்தஎழில் நிறைகாட்சி இலக்கியச் சோலைக்குள்ளே
இருத்தல் போலும்!

திரு. கி. வா.ஜகந்நாதன்,
'ஆசிரியர்', கலைமகள்.

ஐந்திணைக் காட்சிகள், கருப்பொருள், உரிப்பொருள் சிறக்க அமைக்கப்பெற்றுள்ளதைக் கண்டு உண்மையிலேயே மகிழ்ந்தேன். வாழ்க!

திரு. கம்பன் அடிப்பொடி,
காரைக்குடி.

''அதிஅற்புதம்'' என்ற நடைமுறை உரைகள் இங்குக் காண வருவோர்க்கு உண்மை உணர்த்தும். முதன்முதலாக இத்தமிழுலகம் அரிய செயல்களை இதன்மூலம் உணர்த்துகிறது.

மிகமிக மேன்மையாக இருக்கின்றன. சொற்களால் சொல்ல முடியாது. எழுதவும் முடியாது.

திருக்குறளார் வீ. முனிசாமி,
விழுப்புரம்.

I translated Thirukkural into Japanese. Looking through this exhibition, I could ascertain several parts which I could not understand from the poems.

SHUZO MATSUNAGA,
Japan.

I found this exhibition very realistic, a lot of hard workmanship has obviously gone into this.

ELIZABETH MACLEAN,
New Zealand.

This is a very good exhibition.

MARY B. BROWN,
U. S. A.